மாலைக்கதிர்
Maalaikkathir
சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 15 வியாழக்கிழமை 31.07.2025 கதிர் 271

யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel





# இராஜதந்திரம் என்றால் என்னவென்பது பற்றி மஹிந்தவிடம் கற்றுக்கொள்ள வேண்டும் அநுர

## இப்படி மொட்டுக் கட்சி உபதேசம்

கொழும்பு, ஜூலை 31

“போர்க்காலத்தில்பலம்பொருந்திய நாடுகளுடன் இராஜதந்திரச் சமரில் ஈடுபட்ட தலைவர்தான் மஹிந்த ராஜபக்ஷ. எனவே, இராஜதந்திரம் என்றால் என்னவென்பது தொடர்பில் ஜனாதிபதி அநுர, மஹிந்தவிடம் கேட்டு, கற்றுக்கொள்ள வேண்டும்.” - என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஊடகப் பேச்சாளர் சஞ்சீவ எதிரிமான்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது :-

“போர்க் காலத்தில் மஹிந்த ராஜபக்ஷ பல

7

## தமிழின அழிப்பு விடயத்தில்

# வேட்டையாடிகள் சிக்குகின்றனர் வேட்டைக்காரர்கள் தப்புகின்றனர்



## சிறீநேசன் எம்.பி. சுட்டிக்காட்டு

**மட்டக்களப்பு, ஜூலை 31**

**“தமிழின அழிப்பு விடயத்தில் வேட்டையாடிகள் அகப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், வேட்டைக்கு ஆணையிட்ட வேட்டைக்காரர்கள் இன்னும் வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்படவில்லை. இது விடயத்தில் அம்புகள் மாட்டிக் கொண்டுள்ளன. எய்தவர்கள் இதுவரை கைதாகவில்லை.” - என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறீநேசன் தெரிவித்துள்ளார்.**

**இன்று வியாழக்கிழமை அவரால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலே அவர் இந்தக் விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.**

**அதில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,**

“மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் இறுதி யுத்தம் 2005 இல் இருந்து 2009வரை தீவிரமாக நடைபெற்றது. அதன்போது மனிதக் கடத்தல், சித்திரவதைகள், காணாமல்ஆக்குதல் சர்வசாதாரணமாக நடைபெற்றன. பல்லாயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டனர்.

அதற்குக் கருவிகளாகச் செயற்பட்டதாகக் கூறப்படுவோர் இந்த ஆட்சியில் கைதாகி வருகின்றனர் . ஆனால், கர்த்தார்களாக இருந்த இயக்குநர்கள் இன்னும

7

# பரந்தனில் டிப்பர் மோதி பெண் ஒருவர் உயிரிழப்பு



பரந்தன், ஜூலை 31

கிளிநொச்சி – பரந்தன் பகுதியில் இன்று வியாழக்கிழமை காலை டிப்பர் மோதி பெண் ஒருவர் உயிரிழந்தார்.

பரந்தன் பகுதியைச்

7

# ஆட்சி மாற்றம் திடீரென நடக்கலாம்!

## மொட்டுவின் பேச்சாளர் சஞ்சீவ எதிரிமான்ன சொல்கின்றார்





கொழும்பு, ஜூலை 30

“ஆட்சி மாற்றத்துக்காக 2029 ஆம் ஆண்டு வரை காத்திருக்க வேண்டியதில்லை. அதற்கு முன்னர்கூட ஜனநாயக

7

# கினிகத்தேனை விபத்தில் குடும்பப்பெண் மரணம்!



கினிகத்தேனை, ஜூலை 31

கொழும்பு, மருதானையில் இருந்து நாவலப்பிட்டி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் அதே திசையில் பயணித்த லொறியை முந்திச் செல்ல முயன்றபோது ஏற்பட்ட

7

# முல்லைத்தீவைச் சேர்ந்த வயோதிபர் யாழ்ப்பாணத்தில் விபத்தில் மரணம்



யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ்ப்பாணத்தில் வீதியைக் கடக்க முற்பட்ட முல்லைத்தீவைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் மோட்டார் சைக்கிள் மோதி படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

முல்லைத்தீவு, உடையார்கட்டு பகுதியைச் சேர்ந்த இளையதம்பி நந்தகுமார் (வயது 70) என்பவரே உயிரிழந்தார்.

7

# கந்தரோடையில் பௌத்த மயமாக்கும் செயற்பாடு– நடவடிக்கை எடுக்க தீர்மானம்!

யாழ்ப்பாணம், கந்தரோடையில் பௌத்த மத்தியநிலையம் அமைப்பதற்கான நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டால் அதற்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைக்கு செல்வதற்கு தயாராக இருப்பதாக வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தவிசாளர் திராகராஜா பிரகாஸ் தெரிவித்துள்ளார்.

யாழ். வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு, சபையின் தவிசாளர் திராகராஜா பிரகாஸ் தலைமையில் நேற்றையதினம் இடம்பெற்றது.

இதன்போது யாழ். கந்தரோடையில் பௌத்த மத்திய நிலையம் அமைப்பதற்கு முன்னெடுக்கப்படும் நடவடிக்கை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது. இதன்போதே தவிசாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த விவகாரம் தொடர்பில் தவிசாளர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட கந்தரோடை பகுதியில் அமைந்திருக்கும் தொல்பொருள் திணைக் களத்துக்கு சொந்தமான இடத்தில் பௌத்த மக்கள் தொடர்ச்சியாக பார்வையிடுவதற்காக வந்து கொண்டிருக்கிறார்கள்.

குறித்த பகுதியில் பிக்கு ஒருவர் காணி ஒன்றை கொள்வனவு செய்து பௌத்த மத்திய நிலையம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அதற்காக பொதுமக்களிடமிருந்து நிதி வசூலிப்பு செய்கின்ற ஒரு பெயர் பலகையும் அந்த இடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது.

சட்டவிரோத கட்டடத்துக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதன் முதற்கட்டமாக அவருக்கு அறிவித்தல் வழங்கப்பட்டிருக்கின்றது. குறித்த பகுதியில் கட்டிட நிர்மாணத்தை நிறுத்துமாறு என்னால் பிரசுரம் ஒட்டப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக அங்கு வரும் மக்களுக்கு தமிழ் பௌத்தம் இருந்த வரலாற்றை அத்தோடு இந்துமத, சைவமத வரலாற்றை மறைக்கும் முகமாக அங்கே வருகின்ற கருத்துக்கள் பகிரப்பட்டு வருகின்றது.

இது ஒரு தவறான செயல் இதனை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம்.

அந்த இடத்தில் தொல்பொருள் திணைக்களத்துக்கு சொந்தமான பகுதி களில் வெளிநாட்டு நிறுவனம் ஒன்று அகழ்வா ராய்ச்சியை செய்து வருகின்றது. அருகில் இருக்கும் காணிகளில் இந்த அகழ்வாராட்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அண்மையில் நான் அறிந்தேன், ஆய்வுகளின் போது மூன்று அடி உயரமான ஒரு கிருஷ்ணர் சிலை அங்கே கிடைக்கப் பெற்றிருக்கின்றது. அதனை மூடி மறைத்து குறித்த பகுதியில் ஆய்வுகளை மேற்கொள்ளாமல் வேறு இடங்களில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இந்த பௌத்த மயமாக்கல் என்பது எங்களுடைய பிரதேசத்தில் அதாவது தையிட்டியை போல், மீண்டும் கந்தரோடையிலும் தொல்லியல் திணைக்களத்தின் அனுசரணையுடன் தற்போதைய அரசாங்கமும் பௌத்த மாயமாக்கலை எமது பிரதேசத்தில் அமுல்ப்படுத்த நினைக்கின்றது.

இந்த நடவடிக்கைகளை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் அதற்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைக்கு செல்வதற்கும் நாங்கள் தயாராக இருக்கின்றோம் என தெரிவித்தார்.

## பொதுமக்களின் நம்பிக்கையை அதிகரிக்கும் வகையில் நீதித்துறையை மேம்படுத்த நடவடிக்கை- புதிய பிரதம நீதியரசர்!

கொழும்பு, ஜூலை 31

பொதுமக்களின் நம்பிக்கையை அதிகரிக்கும் வகையில் நீதித்துறை செயல்முறையை மேம்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று புதிய பிரதம நீதியரசர் பிரீதி பத்மன் சூரசேன தெரிவித்துள்ளார்.

புதிய பிரதம நீதியரசர் பிரீதி பத்மன் சூரசேனவை வரவேற்கும் வைபவம் இன்று (31) உயர் நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வழக்கு விசாரணையை விரைவுபடுத்தவும், நீதித்துறை அமைப்பிற்குள் பொதுமக்களுக்கு பயனுள்ள சேவைகளை வழங்கவும் நீதித்துறை செயல்முறைகளின் டிஜிட்டல் மயமாக்கல் துரிதப்படுத்தப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.

புதிய பிரதம நீதியரசர் பிரீதி பத்மன் சூரசேனவை வரவேற்கும் நிகழ்வில் உயர் நீதிமன்றம் மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நீதிபதிகள், உயர் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் நீதவான் நீதிமன்றங்களின் நீதிபதிகளும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொஸ்கொட துப்பாக்கிச் சூட்டு சம்பவம்– சம்பவத்திற்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் கண்டுபிடிப்பு!

கொஸ்கொட, தூவமோதர பகுதியில் இன்று (31) அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் மோட்டார் சைக்கிளை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். துப்பாக்கிச் சூடு நடைபெற்ற இடத்திலிருந்து சுமார் 6 மஅ தொலைவில் உள்ள கொஸ்கொட அதுருவெல்ல பாலத்திற்கு அருகிலுள்ள ஆற்றில் மோட்டார் சைக்கிள் கைவிடப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். கொஸ்கொட, தூவமோதர பகுதியில் இன்று (31) அதிகாலை நடைபெற்ற துப்பாக்கி சூட்டில் 23 வயதுடைய இளைஞன் ஒருவர் உயிரிழந்தார். குறித்த துப்பாக்கி சூட்டு சம்பவத்திற்கு வு56 ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந்த சம்பவம் குறித்து கொஸ்கொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# முஸ்லிம் பெண்களின் கலாச்சார ஆடைகளை அகற்ற பணிப்புரை



சுகாதாரத் துறையில் பணி புரியும் முஸ்லிம் பெண் ஊழியர்கள் அணியும் கலாச்சாரம் சார்ந்த ஆடைகளை அகற்றுமாறு திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வழங்கியுள்ள பணிப்புரையை ஏற்றுக்கொள்ள முடியாதென திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"திருகோணமலையிலுள்ள வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களில் கடமையாற்றும் முஸ்லிம் தாதியர்கள், மருத்துவ மாதுகள் மற்றும் சிற்றூழியர்கள் இனிமேல் கலாச்சார ஆடை அணிந்து கடமைக்கு வரக்கூடாது என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட அலுவலர்கள் எனது கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

தாங்கள் கடமை ஏற்றது முதல் தற்போது ஓய்வூதியம் பெறும் வயதை அடைந்துள்ள இதுவரையான காலத்தில் எங்களது சீருடையுடன் கலாச்சார உடையும் சேர்த்து அணிந்தே சென்றே கடமைகளை முன்னெடுத்து வருகிறோம். ஆனால், தற்போது கலாச்சார உடை அணிந்து கடமைக்கு வரக்கூடாது என்றும் இதை மீறும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எமக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்றும் இவ்விடயத்தினை கவனத்தில் எடுத்து எமக்கு நியாயம்பெற்றுத்தாருங்கள் என்று பாதிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இனவாதம் இல்லாத ஆட்சி என்று மேடைக்கு மேடை கூறிக்கொள்ளும் இந்த அரசாங்க காலத்தில் எந்த ஆட்சியிலும் இல்லாத வகையில் முஸ்லிம் பெண்களின் ஆடை விடயத்தில் இனவாத போக்கை கையில் எடுத்துள்ள அரச அதிகாரிகளுக்கு எதிராக இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா அல்லது இந்த உத்தரவின் பின்னால் இந்த அரசாங்கம் தான் உள்ளதா என்ற சந்தேகம் உருவாகிறது.

குறித்த பதவிகளுக்குரிய சீருடைக்கு மேலதிகமாக முஸ்லிம் பெண் ஊழியர்கள் தமது கலாச்சார ஆடைகளை காலாகாலமாக அணிந்து வருகிறார்கள். இதனை இப்போது அகற்ற சொல்வது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

இந்த உத்தரவை வாபஸ் பெறப்பட வேண்டும். இனவாதத்தை தற்போது கையில் எடுத்துள்ள அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்கம் இந்த விடயத்தை கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்க்கிறேன்" என தெரிவித்தார். (ஐ)

## கிழக்கு மாகாணத்தை வலுப்படுத்துவதற்கான திட்டங்கள்







கிழக்கு மாகாணத்தை வலுப்படுத்துவது னூடாக சாத்தியமான பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்துவது தொடர்பாக உயர் மட்ட கலந்துரையாடலானது மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் தலைவரும் அமைச்சருமான சுனில் ஹந்துனெத்தி தலைமையில் பங்குபற்றுதலுடன் புதிய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் புதன்கிழமைஅன்று இடம் பெற்றது.

இந்த கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்திலால் ரத்ணசேகர மற்றும் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரும் கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை பிரதி அமைச்சருமான வசந்த பியதிஸ்ஸ, பாராளுமன்ற உறுப்பினர் ரொசான் அக்மிமானமற்றும் இலங்கை மற்றும் மாலைதீவுகள் நாட்டிற்கான உலக வங்கியின் முகாமையார்

ஜிவேர்ஜ் சார்கசியன் (புநளழசப ளுயசபளலயெ) ஆகியோரின் பங்குபற்றினர்.

இதன் போது உலக வங்கியின் நிதி உதவியுடன் கிழக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட ஏழு பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல் தொடர்பாக இதன் போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இவ் அபிவிருத்தி வேலைத்திட்டத்தினுடாக மீன்பிடி, பெறுமதி சேர் விவசாய பொருட்களை உற்பத்தி செய்தல், சுற்றுலாத்துறையை மேம்படுத்தல், தனியார் தொழில் வாய்ப்பை ஏற்படுத்தல், வறுமை ஒழிப்பு போன்ற மேலும் பல விடயங்களை மையப்படுத்தியதாக குறித்த வேலைத்திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளதுடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் மீண்டும் உள்ளூார் விமான சேவைகளை ஆரம்பித்தல் உடாக சுற்றுலா துறையை மேம்படுத்தல் தொடர்பாகவும் இதன் போது விசேடமாக கலந்துரையாடப்பட்டது.

இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம, திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர்டபிள்யூ. ஜி.எம். ஹேமந்த குமார, திணைக்கள தலைவர்கள், உலக வங்கியின் உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், துறைசார் நிபுணர்கள், மாவட்ட செயலக உயர் அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.

மேலும் இதன் போது திருகோணமலை மாவட்டத்தில் நிலாவெளி பிரதேசத்தில் சுற்றுலா துறை வலயத்தை மேம்படுத்தல் இப்பிரதேசத்தில் குடிநீர் வழங்கல், மேலும் மீன்பிடி துறைமுகத்தை அபிவிருத்தி செய்தல், கந்தளாய் பிரதேசத்தில் கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி செய்வதற்கான செயற்திட்டம்

உள்ளிட்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் புராதன ஒல்லாந்தர் கோட்டையை புனர்நிர்மானம் செய்தல், நகரை அழகுபடுத்தல், நகரை அண்டிய புதிய பாலங்களை அமைத்தல், பாசிக்குடா கடற்கரையை அபிவிருத்தி செய்தல் மற்றும் அம்பாறை மாவட்டத்தில் அருகம்பை கடற்கரையை நீலக் கடற்கரையாக மாற்றுவதோடு சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையில் அபிவிருத்தி செய்தல், கல்முனை சந்தை மற்றும் இப்பிரதேசத்தில் அழகுபடுத்தல், பானம பிரதேசத்தையும் அபிவிருத்தி செய்தல், பொத்துவில் பேருந்து நிலையத்தை மேம்படுத்துதல், மற்றும் குடிநீர் வழங்கல் செயற்றிட்டங்களை மேற்கொள்ளுதல் போன்ற விடையங்கள் தொடர்பாக இதன் போது தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டன. (ஐ)

## இரத்தினபுரி பொலிஸ் தலைமையக அதிகாரிகள் இருவர் பணி இடைநீக்கம்!

கொழும்பு, ஜூலை 31

இரத்தினபுரி பொலிஸ்தலைமையகத்தின் இரண்டு அதிகாரிகளை பணி இடைநீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எப்.யு. வுட்லர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் தெரிய வருவதாவது,

பல குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட சந்தேக நபர் ஒருவர் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, மேலதிக விசாரணைகளுக்காக இரத்தினபுரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு பொலிஸ் நிலையத்தின் தடுப்புக் காவலில் இருந்துள்ளார்.

இந்தநிலையில் நேற்றையதினம் (30) குறித்த சந்தேகநபர் கழிப்பறையைப் பயன்படுத்த வேண்டும் என்று கூறியதாகவும், அப்போது சிறைக் கதவு திறக்கப்பட்ட போது பொலிஸ் அதிகாரிகளிடமிருந்து தப்பிச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர் தப்பிச் சென்ற காரணத்தினால் இரத்தினபுரி பொலிஸ் தலைமையகத்தில் விடயத்திற்கு பொறுப்பாக செயற்பட்ட அதிகாரியும், சம்பவத்தின் போது பொலிஸ் நிலையத்திற்கு பொறுப்பாக இருந்த அதிகாரியும் இவ்வாறு பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்த குறித்த சந்தேகநபர், சமீபத்தில் பாணந்துறை பகுதியில் நடந்த பல துப்பாக்கிச் சூடு சம்பவங்களில் தொடர்புடையவர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தப்பிச் சென்ற சந்தேகநபரை கைது செய்வதற்காக விசேட பொலிஸ் குழுவொன்று கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## 6 மாதங்களில் 34 பேர் கைது

கொழும்பு, ஜூலை 31

2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் லஞ்சம் தொடர்பான சம்பவங்கள் தொடர்பாக 34 நபர்கள் கைது செய்யப்பட்டதாக லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு (CIABOC) தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி 1 முதல் ஜூன் 30 வரை 3,022 முறைப்பாடுகள் கிடைத்ததாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தக் காலகட்டத்தில், 54 சோதனைகள் நடத்தப்பட்டு, 34 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

அந்த சந்தேக நபர்களில் இலங்கை பொலிஸை சேர்ந்த 10 அதிகாரிகள், நீதி அமைச்சின் 5 அதிகாரிகள், சுகாதார அமைச்சின் 2 அதிகாரிகள் மற்றும் இலங்கை போக்குவரத்து சபைளைச் சேர்ந்த 2 அதிகாரிகள் அடங்குவர்.

கூடுதலாக, இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் லஞ்சம் வாங்கிய சம்பவங்கள் தொடர்பாக 6 பொதுமக்கள் கைது செய்யப்பட்டதாக ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

இந்த காலகட்டத்தில், லஞ்சம் தொடர்பான 60 சந்தேக நபர்களுக்கு எதிராக பல்வேறு நீதிமன்றங்களில் 50 சட்ட வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

மேலும், 6 வழக்குகள் முடிவுக்கு வந்துள்ளன, அதே நேரத்தில் நாடு முழுவதும் உள்ள நீதிமன்றங்களில் 273 லஞ்சம் தொடர்பான வழக்குகள் தற்போது விசாரிக்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தேசிய ஜனநாயக கூட்டணி உடனான உறவு முறிந்தது: ஓபிஎஸ் ஆதரவாளர் பண்ருட்டி ராமச்சந்திரன் பேட்டி



தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து ஓ.பி.எஸ் தலைமையிலான அதிமுக உரிமை மீட்புக் குழு வெளியேறுவதாக அறிவித்துள்ளது. சென்னையில் தனது ஆதரவு நிர்வாகிகளுடன் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆலோசனை நடத்தினார். ஆலோசனைக் கூட்டத்துக்கு பிறகு செய்தியாளர்களை சந்தித்து பேசிய ஓபிஎஸ் ஆதரவாளர் பண்ருட்டி ராமச்சந்திரன் தேசிய ஜனநாயக கூட்டணி உடனான உறவு முறிந்தது. ஒருமித்த கருத்தாகத்தான் பாஜக கூட்டணியிலிருந்து விலக முடிவு எடுத்துள்ளோம். இனி எப்போதும் தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம் பெறமாட்டோம்.

எந்தக் கட்சியுடனும் தற்போது கூட்டணி இல்லை. கூட்டணியில் இருந்து விலகிய காரணம் அனைவருக்கும் தெரிந்ததுதான். பாஜக எங்களுக்கு என்ன செய்தது என்பதை நாடறியும்சொல்ல வேண்டியதில்லை. தமிழ்நாடு முழுவதும்ஓ.பன்னீர்செல்வம் சுற்றுப் பயணம் மேற்கொள்வார். யாருடன் கூட்டணி என்பது குறித்து ஆராய்ந்து முடிவு செய்யப்படும். என்று கூறினார். (ஐ)

## நாட்டையே உலுக்கிய மாலேகான் குண்டுவெடிப்பு வழக்கில் அனைவரும் விடுதலை: மும்பை என்.ஐ.ஏ. நீதிமன்றம் தீர்ப்பு



நாட்டையே உலுக்கிய மாலேகான் குண்டுவெடிப்பு வழக்கில் பாஜக முன்னாள் எம்.பி. பிரக்யாக் சிங் தாக்குர் விடுதலை செய்யப்பட்டனர். கடந்த 2008 செப்டம்பர் 29ல் மகாராஷ்டிராவின் மாலேகான், நாசிக்கில் மோட்டார் சைக்கிளில் வைக்கப்பட்டிருந்த வெடிபொருள் வெடித்த சம்பவத்தில் 6 பேர் கொல்லப்பட்டனர். இந்த குண்டுவெடிப்பில் 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். மாலேகான் குண்டுவெடிப்பு தொடர்பாக பெண் சாமியாரும், பாஜக எம்.பியுமான பிரக்யா சிங் தாகூர், ஓய்வுபெற்ற ராணுவ மேஜர் ரமேஷ் உபாத்யாய் உள்பட 7 பேர் கைது செய்யப்பட்டனர். மும்பையில் உள்ள என்.ஐ.ஏ., சிறப்பு நீதிமன்றத்தில், இந்த வழக்கு விசாரிக்கப்படுகிறது.

மகாராஷ்டிரா பயங்கரவாதத் தடுப்புப் படை, இந்த வழக்கை முதலில் விசாரித்தது. பின்னர் தேசிய புலனாய்வு முகாமை இவ்வழக்கை விசாரித்தது. இந்த வழக்கின் விசாரணைகள் அனைத்தும் கடந்த ஏப்ரல் மாதத்தில் முடிவடைந்து தீர்ப்புக்காக ஒத்தி வைக்கப்பட்டது. 17 ஆண்டுகளாக விசாரணை நடைபெற்ற நிலையில் மும்பை என்.ஐ.ஏ. நீதிமன்றம் இன்று தீர்ப்பு வழங்கியது. பாஜக முன்னாள் எம்.பி. பிரக்யாக் சிங் தாக்குர், லெப்டினன்ட் கர்னல் பிரசாத் புரோஹித் உள்ளிட்ட 7 பேரும் விடுதலை செய்து தீர்ப்பளித்தது. ராஜா ரஹீர்கர், சுவாமி அம்ரூதானந்த், சுதாகர் சதுர்வேதி ஆகியோரையும் விடுதலை செய்தது.

இந்த சம்பவத்தில் பிரக்யா சிங் தாக்குருக்கு தொடர்பு இருப்பதை நிரூபிக்க அரசு தவறிவிட்டது. பிரசாத் புரோஹித் வீட்டில் வெடிபொருள்கள் வைத்திருந்ததற்கான எந்த ஆதாரமும் இல்லை. கைரேகை, வெடிமருந்து குப்பை என எதுவும் சேகரிக்கப்படவில்லை. அபினவ் பாரத் அமைப்பு பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு பணத்தைப் பயன்படுத்தப்பட்டதற்கான எந்த ஆதாரமும் இல்லை. குற்றச்சாட்டிற்கு உரிய ஆதாரத்தை வழங்க தவறிவிட்டதாக கூறி அனைவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர். குண்டுவெடிப்பில் உயிரிழந்த 6 பேரின் குடும்பங்களுக்கு தலா ரூ.2 லட்சம் நிதி அளிக்க வேண்டும். குண்டுவெடிப்பில் காயமடைந்தவர்களுக்கு தலா ரூ.50,000 இழப்பீடு வழங்கவும் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (ஐ)

## ரூ.22.69 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 12 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்களை திறந்து வைத்தார் முதல்வர்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று (31.07.2025) தலைமைச் செயலகத்தில், வணிகவரி மற்றும் பதிவுத்துறை சார்பில் 27 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 மாநிலவரி அலுவலகக் கட்டடங்கள் மற்றும் 12 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் செங்கல்பட்டு பதிவு மாவட்டத்தில் திருப்போரூர் சார்பதிவாளர் அலுவலகத்தினை பிரித்து புதியதாக உருவாக்கப்பட்டுள்ள நாவலூர் மற்றும் கேளம்பாக்கம் ஆகிய இரண்டு புதிய சார்பதிவாளர் அலுவலகங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

மாநிலத்தின் வரி வருவாயில் மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் பங்களிக்கும் முக்கிய துறையாக வணிகவரித்துறை விளங்கி வருவதோடு, வரி வசூல் மற்றும் வரி நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனையும் உறுதி செய்து வருகிறது. மேலும், பதிவுத்துறை வாயிலாக மக்கள் தங்கள் சொத்துக்களின் மீதான உரிமையை தமது பெயரில் பதிவு செய்தல், திருமணத்தைப் பதிவு செய்தல், சங்கங்கள், சீட்டுகள் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்கள் பதிவு செய்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயல்பாடுகளை மேலும் மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

2 மாநிலவரி அலுவலகக் கட்டடங்களை திறந்து வைத்தல்

வணிகவரித் துறை சார்பில் திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தில் 1 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவிலும், திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவிலில் 2 கோடியே 53 இலட்சம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள மாநிலவரி அலுவலகக் கட்டடங்கள்

12 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்களை திறந்து வைத்தல்

வணிகவரி மற்றும் பதிவுத்துறை மானியக் கோரிக்கையில் புதிய சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க, இராமநாதபுரம் மாவட்டம் பெருநாழி மற்றும் கமுதி தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம், கயத்தாறு, கழுகுமலை மற்றும் ஆழ்வார்திருநகரி திருநெல்வேலி மாவட்டம் வடக்கு வீரவநல்லூர் மற்றும் முக்கூடல் தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் கடலூர் மாவட்டம் பெண்ணாடம் மற்றும் குமராட்சி தென்காசி மாவட்டம் சிவகிரி ஆகிய இடங்களில் 22 கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 12 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் என மொத்தம் 27 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் வணிகவரி மற்றும் பதிவுத் துறைக்கு புதிய கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் திறந்து வைத்தார். (ஐ)

## இந்தியா மீதான அமெரிக்க வரி விதிப்பு உலக வர்த்தக மைய ஒப்பந்தத்தை மீறிய செயல்: ப.சிதம்பரம்



இந்தியா மீதான அமெரிக்க வரி விதிப்பு உலக வர்த்தக மைய ஒப்பந்தத்தை மீறிய செயல் என காங்கிரஸ் மூத்த தலைவர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார். இந்தியா மீதான அமெரிக்காவின் 25% வரி விதிப்பு வரத்தக ஒப்பந்தத்தில் கடும் பின்னடைவாகும். இந்தியா, அமெரிக்கா வர்த்தக உறவில் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் உள்ளது. நாட்டின் வர்த்தக நலன்களை பாதுகாக்க தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார். (ஐ)

## முதலமைச்சர் ஸ்டாலினை நட்பு ரீதியாக சந்தித்தேன்

முதலமைச்சர் ஸ்டாலினை நட்பு ரீதியாக சந்தித்தேன் என தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் அளித்த பேட்டியில் முதலமைச்சர் ஸ்டாலினுடன் விஜயகாந்துக்கு 45 ஆண்டு கால நட்பு. விரைந்து குணமடைய வேண்டும் என்று முதல்வரிடம் தெரிவித்து வந்தோம்.

தேமுதிக வளர்ச்சியில் மட்டுமே கவனம் செலுத்தி வருகிறோம் என அவர் தெரிவித்தார். (ஐ)





# காதல் கொலைகள்!

'காதல்' இந்த வார்த்தை போலக் கொண்டாடப்படும் வார்த்தையும் தூற்றப்படும் வார்த்தையும் இல்லை என்றே சொல்லலாம். ஓர் ஆணும் பெண்ணும் பருவ வயதில் ஒருவர்பால் இன்னொருவர் ஈர்க்கப்பட்டு இயற்கையாக எதிர்கொள்ளும் காதல்தான் பெற்றோரின், சமூகத்தின் அழுத்தம் காரணமாகப் பல்வேறு பிரச்சினைகளுக்குள் சிக்கி தற்கொலை, கொலை வரை சென்று முடிகிறது. நம் சமூகத்தில் புரையோடிப்போயிருக்கும் சாதிய மனநிலை காரணமாக நடக்கும் ஆணவக் கொலைகள் மிக கொடூரமானவை. 'இப்போது எல்லாம் காலம் மாறிடுச்சு யார் சாதி பார்க்கிறார்கள்' என்று கூறுவது மிக மேலோட்டமான கருத்து. டெக்னோலஜி வளர்ந்துவிட்ட இந்தக் காலத்தில் சாதியும் அதன் மூலமாக விஷ ங்களை வீரியமாக விதைத்து வளர்க்கிறது. அரசியல் காரணங்களுக்காக அந்த விஷவித்துகள் வளர்வதைக் கண்டும் காணாமல் கடந்து செல்லும் போக்கு நிலைமையை மேலும் மோசமாக்கிகொண்டு இருக்கிறது. சமூக வலைத்தளங்களில் சாதிப் பெயருடன் தன்னை அடையாளப்படுத்திக்கொள்வது ஒரு புறம் என்றால், சாதிக்கென சங்கங்கள், அடையாளங்களுடன் பெருமை பீற்றி வருகிறது. இந்தப் பெருமை பீற்றலில் எந்தச் சாதியும் ஒன்றுக்கு இன்னொன்று சளைத்ததில்லை. இந்தச் சாதிய பெருமையைக் கட்டிக்காக்க வேண்டிய பொறுப்பு அந்தச் சாதியில் பிறந்த பெண்களின் கட்டாயமாக்கப்படுகிறது.

பெண்சாதியைக்கட்டிக்காக்க வேண்டிய பொறுப்பில் இருப்பதால், அவள் வேறு சாதி ஆணைக் காதலிப்பதோ அவன் மூலம் குழந்தை பெற்றுக் கொள்வதோ பெரும் கௌரவ குறைச்சலாக பார்க்கப்படுகிறது. சாதி ஆணவக்கொலையில் அதிகளவில் கொலையாவது பெண்கள்தாம்.

தமிழ்நாடு ஓரளவு படித்து முன்னேறிய மாநிலம்தான். ஆனால், இங்கேயே ஆண்டுக்கு 120 முதல் 150 வரை காதல் கொலைகள் ஆணவக் கொலைகள் நடப்பதாகக் கூறப்படுகிறது. அப்படி என்றால் இன்னும் சாதியைப் பெருமையாகப் பெயரில் சுமந்து திரியும் வட மாநிலங்களில் ஆண்டுக்கு எத்தனை கொலைகள் நடக்கும்? ஆணவக் கொலைகள் சாதி மாறி திருமணம் செய்வதால் நடக்கின்றன. அது ஒரு புறம் என்றால், இன்னொரு பக்கம் ஒரே சாதியைச் சேர்ந்த ஆண், பெண் காதலித்தாலும் கொலை செய்யப்படுகிறார்கள் இரு தினங்களுக்கு முன்னர் தூத்துக்குடியைச் சேர்ந்த மென் பொறியாளர் கவின் அதே இடதில் வசிக்கும் வேறு சமூகத்தை சேர்ந்த சுபாஷினியை காதலித்தற்காக அந்த இளைஞனுடன் ஆணவக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இங்கு சாதி, மதம் தவிரவும் பல்வேறு காரணங்கள் காதலிக்கவும் காதலித்தவனைத் திருமணம் செய்து கொள்ளவும் தடையாக இருக்கின்றன. ஒரு குழந்தையைக் குழந்தையாகப் பார்க்கும் மனப்பாங்கு பெரும்பான்மையான இந்தியப் பெற்றோரிடத்தில் இல்லை. அதே போல பெரும்பாலானோர் தங்கள் இன, குல விருத்தி மட்டும் தங்கள் சொத்துகளுக்கான வாரிசாகவும், தங்கள் நிறைவேறாத ஆசைகளை நிறைவேற்றவும், சமூகத்தின் கட்டாயத்துக்காகவும் குழந்தை பெற்றுக் கொள்கிறார்கள். ஓர் ஆணும் பெண்ணும் சுய விருப்பத்துடன் தங்கள் அன்பின், காதலின் அடையாளமாகக் குழந்தை பெற்றுக்கொண்டால், கண்டிப்பாக அந்தக் குழந்தையைக் கொலை செய்யுமளவு துணிய மாட்டார்கள்.




குழந்தைகளை வளர்க்கிறோம் எனச் சிறந்த கொத்தடிமைகளை உருவாக்குவதைத்தான் பெரும்பான்மையான பெற்றோர் எவ்வித உறுத்தலுமின்றி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதற்கு அவர்கள் இட்டுக்கொள்ளும் பெயர்கள் அன்பு, அக்கறை, பாசம், பந்தம் என எத்தனை அழகான பெயர்கள் இருக்கிறதோ அத்தனையும் தருகிறார்கள்.

அவர்களிடம் சிலர் சென்று உங்க பெண் கஷ்டப்படுது, அவனும் இல்லை. வீட்டுக்குக் கூட்டி வரக் கூடாதா என்று கேட்டால், எங்க பேச்சை மீறிப் போனவளை நாங்கள் ஏன் வீட்டில் சேர்க்க வேண்டும் என்று கூறிவிட்டார்கள்.

இந்த உலகத்தில் பெற்றோர் பாசம் போலச் சிறந்தது இல்லை என்பார்கள். ஆனால், நிஜத்தில் பெரும்பாலான பெற்றோர் பாசம் வன்மம் கலந்ததுதான். பெற்றோருக்கு அடிமையாக இருந்தால்தான் பாசம் காட்டுவார்கள். .

காதலிப்பது திமிர் என்று கூறும் பெற்றோர்தாம், காதலித்து விட்டதற்காகப் பெண்ணை ஒதுக்கி வைப்பதில் இருந்து கொலை வரை செய்கிறார்கள். இதில் அன்பு எங்கிருக்கிறது? அன்பு தனது இரத்த சம்மந்த உறவு கஷ்டப்படுவதைப் பார்த்துக் கொண்டிருக்குமா? அன்பு பார்த்து, பார்த்து வளர்த்த குழந்தையை எதிரியாகப் பார்க்குமா? தன் பேச்சைக் கேட்காமல் தனக்காகத் துணையைத் தேடிக்கொண்ட பிள்ளையைக் கொலை செய்யுமா?

தனக்கென விருப்பு, வெறுப்பு எதுவும் இன்றி பெற்றோர் பேச்சுக்கு பூம் பூம் மாடு போலத் தலையாட்டினால் மட்டும்தான் பிள்ளைகள் மீது அன்பு காட்ட முடியும் என்றால், ஒரு நாயோ பூனையோ வளர்த்து தங்கள் அன்பைக் கொட்டி பூரித்துக் கொள்ளலாம். எதற்கு ஒரு குழந்தையைப் பெற்று வளர்த்து, அவர்களுக்குச் சிந்திக்கும் அறிவைக் கொடுத்து, பின் அவர்களாகச் சிந்தித்து சுயமாக முடிவெடுப்பதைத் தாங்கிக்கொள்ள முடியாமல் கொலை வரை செல்ல வேண்டும்.

உண்மையான அன்பு, உண்மையான காதல், எல்லாம் சினிமாவில் பார்த்து ரசிக்கும் பூடிதநஉவளைநதான் பலருக்கும். அதை நிஜ வாழ்க்கையில் யாருக்கும் கொடுப்பதுமில்லை, கொண்டாடுவதுமில்லை.



# அமெரிக்காவின் 5-ம் தலைமுறை போர் விமானம் F-35 தரையில் விழுந்து நொறுங்கியது

கலிபோர்னியாவின் லேமோர் கடற்படை தளத்திற்கு அருகிலுள்ள பகுதியில் அமெரிக்காவின் 5-ம் தலைமுறை போர் விமானமான கு-35 தரையில் விழுந்து நொறுங்கியது. விபத்திற்குள்ளான விமானத்தின் காக்பிட்-ல் இருந்து தூக்கி வீசப்பட்ட விமானி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவசரகால குழுவினர் சம்பவ இடத்தில் மீட்புபணியில் ஈடுபட்டுள்ளனர்.

உலகின் மிகப்பெரிய 5-ம் தலைமுறை விமானமாக கு-35 விமானம் பார்க்கப்படுகிறது. இதில் கு-35 யு, கு-35 டீ, கு-35 ஊ என 3-வகைகள் உள்ளது. இதில் ஊ வகை போர் விமானம் கடற்படைக்கு பயன்படுத்தக்கூடியது. இந்த விமானம் தற்போது விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்துக்கான காரணம் தற்போதுவரை அறியப்படவில்லை.

உலகின் முதல் 5-ம் தலைமுறை விமானமாக கு-35 விமானம் பார்க்கப்பட்டது. தற்போதுவரை உலகின் சக்திவாய்ந்த விமானங்களில் ஒன்றாக பார்க்கப்பட்டுள்ளது. ராஃப் ரைடர்ஸ் என்று அழைக்கப்படும் ஸ்ட்ரைக் ஃ பைட்டர் ஸ்குவாட்ரான் ஏகு-125க்கு பயிற்சி விமானமாக இந்த கு-35 ஊ விமானம் இணைக்கப்பட்டிருந்தது.

இன்று வழக்கம் போல பயிற்சி தொடங்கியபோது இந்த விபத்து ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த விபத்து நடந்த இடம் விவசாய நிலம் என்பதால் பெரிய அளவில் பாதிப்புகள் இல்லை. (ஐ)



## பாலஸ்தீனத்தை அங்கீகரிப்போம்

பிரிட்டன், பிரான்ஸ் நாடுகளை தொடர்ந்து கனடாவும் பாலஸ்தீனத்தை அங்கீகரிப்போம் என்று அறிவித்துள்ளது. இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போரை முடிவுக்கு கொண்டு வருவதற்காக உலக நாடுகள் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியை சந்தித்து வருகின்றன. இந்த நிலையில் வரும் செப்டம்பர் மாதம் பாலஸ்தீன அரசை அங்கீகரிப்போம் என்று கனடா பிரதமர் மார்க் கார்னி அதிரடியாக அறிவித்துள்ளார். இது குறித்து சமூக வலைதள பக்கத்தில் பதிவிட்டுள்ள மார்க் கார்னி, மத்திய கிழக்கில் இஸ்ரேல் ஒரு சுதந்திர நாடாக இருப்பதை கனடா எப்போதும் உறுதியாக ஆதரிக்கும் என்று தெரிவித்துள்ளார்.

அதே நேரத்தில் இஸ்ரேல் அரசுடன் அமைதியுடனும் பாதுகாப்புடனும் வாழும் ஒரு சுதந்திரமான மற்றும் இறையாண்மை கொண்ட நாடு பாலஸ்தீனம் என்றும் வரும் செப்டம்பர் மாதத்தில் பாலஸ்தீன அரசை அங்கீகரிப்போம் என்றும் குறிப்பிட்டுள்ளார். கனடாவின் இந்த முடிவுக்கு அமெரிக்காவும் இஸ்ரேலும் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. இது குறித்து இஸ்ரேலிய வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கனடா அரசின் நிலைப்பாட்டில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றம் ஹமாஸ்/க்கு ஒரு வெகுமதி என்று தெரிவித்துள்ளது. காஸாவின் போர் நிறுத்தத்திற்கும் பிணை கைதிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளுக்கும் இந்த முடிவு தீங்கை விளைவிக்கும் என்று குறிப்பிட்டுள்ளது. (ஐ)



## இஸ்ரேல், பாலஸ்தீன மோதலுக்கு உடனடியாக தீர்வு காண உலக நாடுகள் கவனம் செலுத்த வேண்டும்

இஸ்ரேல், பாலஸ்தீன மோதலுக்கு உடனடியாக தீர்வு காண உலக நாடுகள் கவனம் செலுத்த வேண்டும் என்று ஐ.நா. மாநாட்டில் இந்தியா மீண்டும் வலியுறுத்தி உள்ளது. இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பது தொடர்பாக ஐநாவின் 3 நாள் உயர்நிலைக் கூட்டம் நடைபெற்றது. இதனை அமெரிக்காவும் இஸ்ரேலும் புறக்கணித்தன. தொடர்ந்து பாலஸ்தீன பிரச்சனைக்கு அமைதியான தீர்வு மற்றும் இரு தனித்தனி நாடுகளே தீர்வு என்ற தலைப்பில் "நியூயார்க் பிரகடனம்" என்ற 25 பக்க ஆவணம் வெளியிடப்பட்டது. அதில் காஸ ாவை போரை நிறுத்த வேண்டும், காஸாவை கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஹமாஸ் பயங்கரவாத அமைப்பு அனைத்து துணை கைதிகளையும் விடுவித்து ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

இந்த கூட்டத்தில் பங்கேற்று பேசிய இந்தியாவின் ஐ.நாவுக்கான நிரந்தர பிரதிநிதி பர்வதனேனி, இஸ்ரேல், பாலஸ்தீனம் என்ற இரு நாடுகள் தீர்வை வரவேற்பதாகவும் அதற்கு இந்தியா எப்போதும் ஆதரவாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். அதே நேரத்தில் உலக நாடுகள் பேச்சுவார்த்தை நடத்தி தூதரகங்கள் வாயிலாக இருநாட்டு பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

மேலும் காஸாவில் உள்ள பாலஸ்தீனியர்களுக்கு உணவு, எரிபொருள் மற்றும் பிற அடிப்படை தேவைகள் தடையின்றி கிடைக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (ஐ)



# வரும் காலங்களில் பாகிஸ்தானிடம் இந்தியா எண்ணெய் வாங்கும் நிலைகூட வரலாம்: அமெரிக்க அதிபர் டிரம்ப்

பாகிஸ்தான் உடன் இணைந்து எண்ணெய் ஒப்பந்தங்களில் ஈடுபட இருப்பதாகவும், மிகப் பெரிய சேமிப்பு கிடங்கை அந்நாட்டில் அமைக்கப்போவதாகவும் ட்ரூத் சோஷியல் பக்கத்தில் அமெரிக்க அதிபர் டிரப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுடனான வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகிவிட்டதால், வரும் காலங்களில் பாகிஸ்தானிடம் இந்தியா எண்ணெய் வாங்கும் நிலைகூட வரலாம் என அதிபர் ட்ரம்ப் கூறியுள்ளார்.

அமெரிக்க அதிபர் டிரப்பின் சமூக வலைதள பதிவில்:

இன்று வெள்ளை மாளிகையில் வர்த்தக ஒப்பந்தங்கள் தொடர்பான பணிகளில் நாங்கள் மிகவும் மும்முரமாக இருக்கிறோம். அமெரிக்காவை மிகவும் மகிழ்ச்சியடையச் செய்ய விரும்பும் பல நாடுகளின் தலைவர்களிடம் நான் பேசியுள்ளேன். இன்று மதியம் தென் கொரிய வர்த்தகக் குழுவைச் சந்திப்பேன். தென் கொரியா தற்போது 25மூ வரியில் உள்ளது, ஆனால் அந்த வரிகளை குறைக்க அவர்களுக்கு ஒரு வாய்ப்பு உள்ளது. அந்த சலுகை என்ன என்பதை அறிய நான் ஆர்வமாக உள்ளேன்.

பாகிஸ்தான் நாட்டுடன் நாங்கள் ஒரு ஒப்பந்தத்தை முடித்துள்ளோம், இதன் மூலம் பாகிஸ்தானும் அமெரிக்காவும் தங்கள் மிகப்பெரிய எண்ணெய் இருப்புக்களை மேம்படுத்துவதில் இணைந்து செயல்படும். இந்த கூட்டாண்மையை வழிநடத்தும் எண்ணெய் நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்கும் பணியில் நாங்கள் ஈடுபட்டுள்ளோம். யாருக்குத் தெரியும், ஒருவேளை அவர்கள் ஒரு நாள் இந்தியாவிற்கு எண்ணெய் விற்பனை செய்வார்கள்!

அதேபோல், மற்ற நாடுகளும் கட்டணக் குறைப்புக்கான சலுகைகளை வழங்குகின்றன. இவை அனைத்தும் நமது வர்த்தக பற்றாக்குறையை மிகப் பெரிய அளவில் குறைக்க உதவும் என அவர் தெரிவித்துள்ளார்.

மற்றொரு பதிவில்

இந்தியாவும் ரஷ்யாவும் தங்களது வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை சரிவில் கொண்டு செல்லட்டும். ரஷ்யாவுடன் இந்தியா என்ன வர்த்தகம் செய்கிறது என்பதை பற்றி கவலை இல்லை என இந்தியாவுக்கு எதிராக அமெரிக்க அதிபர் டிரம்ப் தொடர்ந்து காட்டமாக பதிவிட்டுள்ளார். (ஐ)

## கினிகத்தேனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற மேற்படி பெண்ணின் கணவர் படுகாயமடைந்து நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

விபத்தில் உயிரிழந்தவர் கொழும்பு, மருதானையைச் சேர்ந்த 44 வயதுடைய இரண்டு குழந்தைகளின் தாயார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியில் கினிகத்தேனை, மில்லகஹமுல பகுதியில் இன்று அதிகாலை 5:45 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் உறவினரைப் பார்வையிட இந்தத் தம்பதியினர் மோட்டார் சைக்கிளில் சென்றனர்.

இதன்போது, கொழும்பில் இருந்து வட்டவளை நோக்கிச் சென்ற லொறியை மோட்டார் சைக்கிள் சாரதி முந்திச் செல்ல முயன்ற போது, லொறியின் இடது பக்கத்தின் நடுப் பகுதியில் மோட்டார் சைக்கிள் சிக்கிக் கொண்டது.

இதன்போது, மோட்டார் சைக்கிளில் பின் இருக்கையில் இருந்த பெண் லொறியின் இடது பின்புற சக்கரத்தின் கீழ் வீழ்ந்து நசுங்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளின் சாரதியின் கவனக்குறைவே விபத்துக்குக் காரணம் என்றும், எனினும் சந்தேகத்தின் பேரில் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் டிக்கோயா ஆதார வைத்தியசாலையின் சட்ட மருத்துவ பரிசோதகரிடம் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் கினிகத்தேன பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பரந்தனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேர்ந்த சந்திரசேகரம் யதுகிரி (வயது 31) என்ற பெண்ணே உயிரிழந்தார்.

கிளிநொச்சி நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பெண்ணை, பின்னால் வந்த டிப்பர் முந்திச் செல்ல முற்பட்ட போது விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்து இடம்பெற்ற இடத்தில் விபத்தை ஏற்படுத்திய சாரதி பொதுமக்களால் தாக்கப்பட்டார். இதனால் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் சற்று முறுகல் நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## முல்லைத்தீவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முல்லைத்தீவில் இருந்து அச்சுவேலி பகுதியில் உள்ள உறவினர் வீட்டுக்கு வயோதிபர் வந்தார். அவர் கடந்த 27ஆம் திகதி உறவினர் வீட்டுக்கு அருகில் வீதியைக் கடக்க முற்பட்ட வேளை மோட்டார் சைக்கிள் மோதி படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்தவரை மீட்டு, சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## இராஜதந்திரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இராஜதந்திரப் பிரச்சினைகளை எதிர்கொண்டார். அப்படியான பிரச்சினைகள் தற்போது வருமானால் இந்த அரசு நடுங்கிவிடும்.

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு மஹிந்த எடுத்த முடிவால் உலகில் பலம் பொருந்திய நாடுகள் ஓரணியில் திரண்டன. இந்நிலையில் அவற்றைக் கையாள்வதற்கு மஹிந்த கையாண்ட இராஜதந்திர, அரசியல் அனுபவத்தை ஒருபோதும் மறக்க முடியாது.

அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மன், பிரிட்டன் ஆகிய நாடுகளின் தலைவர்களுடன்தான் மஹிந்த இராஜதந்திர நடவடிக்கையில் ஈடுபட்டார்.

எனவே, நேரம் கிடைக்கும் பட்சத்தில், மஹிந்தவைச் சந்தித்து இராஜதந்திரம் மற்றும் அரசியல் தொடர்பில் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு தற்போதைய ஜனாதிபதி அநுரவுக்குக் கூறுகின்றோம்." - என்றார்.

## ஆட்சிமாற்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வழியில் அது நடக்கலாம். அடுத்த ஜனாதிபதி நாமல் ராஜபக்ஷ என்பது சமூகத்தின் கருத்தாகும்." - என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் பேச்சாளரான சஞ்சீவ எதிரிமான்ன இது தொடர்பில் மேலும் கூறியதாவது:-

"அடுத்த ஜனாதிபதி யார் என்ற கருத்தாடல் சமூகத்தில் உருவாகியுள்ளது. அநுரதான் அடுத்த ஜனாதிபதி என்றோ அல்லது பிரதான எதிரணி ஆட்சியைக் கைப்பற்றும் என்றோ சமூகத்தில் கருத்துக்கள் இல்லை. நாமலைப் பற்றித்தான் தேடப்படுகின்றது.

நாமல்தான் அடுத்த ஜனாதிபதி என்ற கருத்தை நாம் உருவாக்கவில்லை. அது சமூகத்தின் பிரதிபலிப்பாக உள்ளது. இயற்கையாகவேதான் அந்தக் கருத்தாடல் உருவாகியுள்ளது. ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் 4 வருடங்கள் உள்ளன என்பது உச்சபட்ச கால எல்லையாகும். எனினும், அதற்கு முன்னர் ஆட்சியை மாற்றலாம். இலங்கையில் இதற்கு முன்னர் எப்படி நடந்தும் உள்ளது. பதவிக் காலம் முடியும் வரை தேசிய மக்கள் சக்தி அரசு பயணிக்கும் என்பதற்குரிய அறிகுறிகள் இல்லை. அரசமைப்பு ரீதியாகக் கூட ஆட்சி மாற்றம் இடம்பெறலாம். ஜனநாயக வழியிலேயே ஆட்சி மாற்றம் நிகழக்கூடும்." - என்றார்.

## கினிகத்தேனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுதந்திரமாகச் செயற்படுகின்றனர்.

மேலும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விடயத்திலும் அம்புகள் அகப்படுகின்றனர். தொடுத்த வில்லர்கள் இன்னும் கைதாகவில்லை. எனவே, இந்த விடயத்தில் நாசகார வேலைகளின் சூத்திரதாரிகள் கைது செய்யப்பட்டு, நீதியின் முன்பாக நிறுத்தப்பட்டு முறையான விசாரணை நடத்தப்பட்டால் அது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை அளிப்பதற்கு உதவும்.

மாறாக வேட்டையாடிகளை மாத்திரம் கைது செய்வதால், நீதி கிடைக்கப் போவதில்லை.1956 இல் இருந்து 2015 வரை இன அழிப்பில் ஈடுபட்ட வேட்டைக்காரர்களோ, வேட்டையாடிகளோ இதுவரை தண்டிக்கப்படாத குற்றவாளிகளாக இருந்து வருகின்றனர்.

இவர்கள் அதியுச்சப் பதவிகளையும் வகித்து வந்துள்ளனர். இவைதான் இந்த நாட்டின் சாபக்கோடாகவுள்ளது. இதனால் குற்றவாளிகளின் ஆளுகையினால் நாடு குட்டிச்சுவராகியுள்ளது. ஊழல், மோசடிகள், கொள்ளை, கொலை தாண்டவமாடியதால் நாடு நாசமாக்கப்பட்டுள்ளது.

பாரிய குற்றச் செயல்களுக்கான பெரிய பெருந்தலைகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுத் தகுதி தராதரம் பார்க்காமல் தண்டிக்கப்பட வேண்டும். பல்லாயிரக்கணக்கான மனிதப் படுகொலைகளுக்கான பெருந்தலைகள் மறைக்கப்படும் வரை இந்த நாடு உருப்பட வாய்ப்பு இல்லை.

குற்றச் செயல்களுக்கான சூழலை உருவாக்குதல், குற்றங்களைச் செய்ய வாய்ப்பளித்தல், குற்றவாளிகளைப் பாதுகாத்தல், குற்றவாளிகள் பொறுப்பு மிக்க பதவிகளை வகித்தல் என்பன நடைபெறுவதால் இந்த நாட்டில் தீர்வுக்கான உள்நாட்டுப் பொறிமுறை உருக்குலைந்து போயுள்ளது. இதற்குப் பல உதாரணங்கள் உள்ளன. வெலிக்கடைப் படுகொலைக்குத் தலைமை தாங்கியதாகக் கூறப்படும் விமானக் கடத்தலில் ஈடுபட்ட சிங்களக்கைதி மற்றும் மிருசுவில் படுகொலையாளியும் மரண தண்டனைக் குற்றவாளியுமான சுனில் ஆகியோர் ஜனாதிபதிகளின் பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டதும் பாரிய குற்றவாளிகளை இனவாத ரீதியில் பாதுகாக்கும் செயல்களாக அமைந்தன. எனவே மனிதக் கடத்தல் காணாமல் ஆக்குதல், படுகொலைகள், வதைகள், உயிர்த்த ஞாயிறுத்தாக்குதல் போன்ற பாரிய குற்றங்களுக்குக் கால்கோளிட்ட சூத்திரதாரிகள் வெளிச்சப்படுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும். அம்புகள், வேட்டையாடிகளை மாத்திரம் தண்டிப்பதால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியோ, பரிகாரமோ கிடைக்காது. மனிதமும் நீதியும் செத்தால் சனநாயகம் பிணநாயகம் ஆகிவிடும்." - என்றுள்ளது.

# அகழ்வு பணி தோல்வியில் கிளிநொச்சியில் சம்பவம்!

கிளிநொச்சி - தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புன்னைநீராவி கிராம அலுவலர் பிரிவில் ஏ 35 பிரதான வீதியில் அருகே உள்ள தனியார் காணியொன்றில் விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் இருக்கலாம் என சந்தேகித்து மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப்பணி, எவ்வித தடயங்களும் காணப்படாத நிலையில் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதவான் இஸ்மாத் ஜெமீல் முன்னிலையில் பொலிசார், இராணுவத்தினர், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், திணைக் களங்களின் உத்தியோகத்தர்கள் இணைந்து இன்றைய தினம் அகழ்வுப்பணியை முன்னெடுத்தனர். எனினும் இந்த அகழ்வு முயற்சியின்போது எந்தவித தடயங்களும் கிடைக்காத நிலையில் அகழ்வுப்பணியை நீதவான் இடைநிறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# யானை தாக்கி சிப்பாய் மரணம்

அநுராதபுரம், ஜூலை 31

அநுராதபுரம் - கல்னேவ, சியம்பலன்கம பகுதியில் காட்டு யானை தாக்கி சிவில் பாதுகாப்புப் படைப் பிரிவைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் சேனபுர பகுதியை வசிப்பிடமாக கொண்ட 44 வயதுடைய சிவில் பாதுகாப்புப் படைப் பிரிவைச் சேர்ந்த சிப்பாய் ஆவார்.

கல்னேவ நெகம்பஹா பகுதியில் அமைக்கப்பட்டுள்ள யானை மின்சார வேலிப் பாதுகாப்புக் கடமைக்கு வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள சிவில் பாதுகாப்புப் படைப் பிரிவைச் சேர்ந்த சிப்பாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்னேவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளம் 2000 ரூபா வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி துண்டுப்பிரசுர விநியோக நடவடிக்கை!

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கான அடிப்படைச் சம்பளமாக 2000 ரூபா வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி ஹட்டன் பஸ் நிலையப் பகுதியில் துண்டுப்பிரசுர விநியோக நடவடிக்கை இன்று (31) முன்னெடுக்கப்பட்டது.

தோட்டத் தொழிலாளர் மத்திய நிலையம், சமூக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பு, மக்கள் போராட்ட இயக்கம் ஆகியவை இணைந்து குறித்த நடவடிக்கையை முன்னெடுத்திருந்தன.

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கான அடிப்படைச் சம்பளமாக 2000 ரூபா வழங்கப்பட வேண்டும்,

மாத சம்பள முறைமை அறிமுகப்படுத்தப்பட வேண்டும், தோட்ட அடிமை முறைமை நீக்கப்பட வேண்டும், காணி உரிமை வழங்கப்பட வேண்டும் முதலான பல கோரிக்கைகளை முன்னிறுத்தியே துண்டுப்பிரசுர விநியோகம் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# புலிகளின் ஆயுதங்கள் தெற்கில் நடந்த குற்றங்களுக்காக பயன்படுத்தப்பட்டனவா? விசாரணைகள் ஆரம்பம்!

வடக்கில் மறைத்து வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் ஆயுதங்களை தெற்கில் நடந்த குற்றங்களுக்காகப் பயன்படுத்தியது குறித்து விரிவான விசாரணை தொடங்கப்பட்டுள்ளதாக பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு (வுஜனு) கொழும்பு கூடுதல் நீதவான் பசன் அமரசேனவிடம் தெரிவித்துள்ளது.

வவுனியாவின் நேரியகுளம் பகுதியில் வசிக்கும் மூன்று பேரை 86 கைக்குண்டுகள், 321 வு-56 வகை வெடிமருந்துகள், 3 பக்கவாட்டு வெடிமருந்துகள் மற்றும் 5,600 கிராம் மெத்தம்பேட்டமைனுடன் கைது செய்த பின்னர் இந்த விடயத்தை பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

கடந்த 21 ஆம் திகதி, வவுனியா பகுதியைச் சேர்ந்த ஒருவர் தெற்கில் குற்றம் செய்ய வு-56 வகை துப்பாக்கியை எடுத்துச் சென்ற நிலையில் கிரிபத்கொட பகுதியில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் நடாத்தப்பட்ட விசாரணைகளின் போது 03 சந்தேக நபர்கள் தொடர்பான தகவல்கள் தெரியவந்தன.

பயங்கரவாத நடவடிக்கைகளின்போது வடக்கில் மறைத்து வைக்கப்பட்ட துப்பாக்கிகள் தெற்கில் குற்றங்களுக்குப் பயன்படுத்தப்பட்டனவா அல்லது ஆயுதங்கள் தெற்கில் உள்ள பாதாள உலகக் குழுக்களுக்கு விற்கப்பட்டனவா என்ற சந்தேகம் இருப்பதால், மூன்று சந்தேக நபர்களையும் நீண்ட நேரம் விசாரிக்க வேண்டும் என்று விசாரணை அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

தெற்கில் உள்ள பாதாள உலகக் குழுக்களுக்கு ஆயுதங்கள் விற்கப்பட்டு பணம் பெறப்பட்டதா என்பது குறித்து நடத்தப்படும் விசாரணைகளுக்கு, மூன்று சந்தேக நபர்களின் வங்கிப் பதிவுகளைப் பெற உத்தரவு பிறப்பிக்குமாறும் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

உண்மைகளைக் கருத்தில் கொண்ட பின்னர், மூன்று சந்தேக நபர்களையும் 90 நாட்கள் காவலில் எடுத்து விசாரிக்கவும், அவர்களின் வங்கிக் கணக்குப் பதிவுகளை வரவழைக்கவும் பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு நீதிபதி அனுமதி வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.07.2025 வெளியிடப்பெற்றது.